மொத்த விலை பணவீக்கம் 13.93%–ஆக சரிவு

புது தில்லி, ஆக. 16: கடந்த 5 மாதங்களில் இல்லாத அளவில் ஜூலை மாதம் மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் 13.93 சதவீதமாக குறைந்தது.

கடந்த ஜூன் மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் 15.18 சதவீதமாகவும், மே மாதத்தில் 15.88 சதவீதமாகவும் பதிவானது. இதுவே கடந்த ஆண்டு ஜூலையில் 11.57 சதவீதமாக இருந்தது. மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் தொடர்ந்து 2-ஆவது மாதமாக குறைந்துள்ளது. இருப்பினும், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ந்து 16 மாதங்களாக இரட்டை இலக்கத்திலேயே பதிவாகி வருகிறது.

கடந்த ஜூலையில் உணவுப் பொருள் மீதான பணவீக்கம் 10.77 சதவீதமாகவும், ஜூனில் 14.39 சதவீதமாகவும் பதிவானது. மேலும் ஜூனில் காய்கறிகளின் விலை உயர்வு 56.75 சதவீதமாக இருந்த நிலையில், ஜூலையில் இது 18.25 சதவீதமாக சரிந்தது. எரிபொருள், மின்சாரத்தைப் பொருத்தவரை ஜூலையில் 40.38 சதவீதமாகவும், ஜூனில் 40.38 சதவீதமாகவும் பணவீக்கம் பதிவானது. இதேபோல உற்பத்தி பொருள்கள், எண்ணெய் வித்துக்களின் பணவீக்கம் முறையே 8.16 சதவீதமாகவும், -4.06 சதவீதமாகவும் பதிவானது.

சில்லறை பணவீக்கத்தின் அடிப்படையில்தான் ரிசர்வ் வங்கி பணக்கொள்கையை வகுக்கிறது. அந்த வகையில், சில்லறை பணவீக்கம் கடந்த 7 மாதமாக ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டுக்கு உகந்த அளவில்தான் பதிவாகி வருகிறது. கடந்த ஜூலையில் சில்லறை பணவீக்கம் 6.71 சதவீதமாக பதிவானது. 2022-23 நிதியாண்டில் சில்லறை பணவீக்கம் சராசரியாக 6.7 சதவீதமாக பதிவாகும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

पंजाब नैशनल बैंक ...भरोसे का प्रतीक !
பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon !

வட்டார சாஸ்த்ரா மையம், சென்னை - எண். 769, இரண்டாம்தளம், ஸ்பென்ஸர் பிளாசா, சென்னை - 600 002.
தொலைபேசி எண்.044 - 4552 2223, Mail: cs3612@pnb.co.in

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8(6) சேர்த்து வாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலமாக விற்பனை செய்தல்.

மின் ஏல தேதி மற்றும் நேரம் : 03.09.2022 காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை
டேவணித்தொகை செலுத்த கடைசி தேதி மற்றும் நேரம் 01.09.2022 மாலை 04:00 மணி வரை

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ/அடையாளபூர்வ/மெய்நிலை சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் மின் ஏல விற்பனை செய்யப்படும். என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. சொத்துக்களின் குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித்தொகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. **வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதும் இல்லை.**

வ.எண்.1: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்
Ms. மது ஒஜா, கணக்கு எண். 01657011001336 மற்றும் 01657015002347 பஞ்சாப் நேஷனல் வங்கி, மவுண்ட் சாலை, சென்னை-24. **Ms. மது ஒஜா,** S-1, 2வது தளம், இராயல் அப்பார்ட்மெண்ட்ஸ், மனை எண்.1-3, சக்திவேல் நகர் 16 வது தெரு, புழல், சென்னை - 600 066 சொத்து **ID: PUNB36120392**
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்): திருமதி. மது ஒஜா அவர்களின் பெயரில் உள்ள, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மேதூர் கிராமத்தின், சர்வே எண்.334/B/1A2A மற்றும் 334/B/1A2B, ஆகியவற்றில் அடங்கிய 50 சென்ட்கள் அல்லது 0.50 ஏக்கர் அல்லது 27180 ச.அடி கொண்ட ஈடுபெற்று அடமானம் வைக்கப்பட்ட காலி நிலம் மற்றும் இச் சொத்தின் **எல்லைகள்:** வடக்கு: சர்வே எண்.334/B/1A1 இல் அடங்கிய நிலம்; தெற்கு: சர்வே எண்.334/B/1A3 கிழக்கு: சர்வே எண்.334/B/1B மேற்கு: சர்வே எண்.1821 (கிராமத்தின் சாலை)
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 01.10.2016
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 1,00,49,323.85 + 01.07.2022 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 10.01.2017 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.29,59,588/-
டேவணித் தொகை : ரூ.2,96,000/-
ஏல உயர்வு தொகை : ரூ.25,000/-

வ.எண்.2: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்:
திரு. M. B. சுரேந்திரநாத், அண்ணாநகர் கிளை, (கணக்கு எண்: **138400NC00223745) திரு. M. B. சுரேந்திரநாத், திரு. B. நிர்மலா,** இருவரின் முகவரி: ஃபிளாட் எண்.K 1201, மெட்ரோ ஜோன், 12வது தளம், J. N. சாலை, சென்னை – 600 040. **PROPERTY ID: PUNB36120355**
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்)
அசையா சொத்தின் விவரம் : அட்டவணை A : மத்திய சென்னை பதிவு மாவட்டம மற்றும் அண்ணா நகர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, பிளாக் எண். 1/1 இன் T. சர்வே எண்.1/1, 1/& பிளாக் எண்.25 இன் 1/2 & 2/4, பிளாக் எண்.27 இன் T. சர்வே எண்.3/2 ஆகியவற்றில் அடங்கிய அட்டவணை A சொத்தில் 9 ஏக்கர்கள் மற்றும் 38 சென்ட்கள் தவிர்த்து (பொது சாலை, OSR, பிறவற்றிற்கு பரிசளிக்கப்பட்ட நிலங்கள் மற்றும் சர்வே எண்.227/3 இல் உள்ள 41 சென்ட்கள் மற்றும் சர்வே எண்.230/2 இல் உள்ள 1 ஏக்கர் 36 சென்ட்கள் சேர்க்கப்படவில்லை) (முன்னர் அட்டவணை A சொத்தின் பகுதி) கூவம் ஆற்றை ஒட்டியுள்ள புதிதாக பரிசளிக்கப்பட்ட 12 மீட்டர் பொதுச் சாலை இல் அமைந்துள் 33ஏக்கர்கள் 18சென்ட்கள் கொண்ட ஈடுபெற்று அடமானத்தில் உள்ள நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, மற்றும் பின்வரும் அதன் **எல்லைகள்:** வடக்கில்: CPWD குடியிருப்புகள்; தெற்கில்: Ozone Projects Pvt Ltd அவர்களால் பரிசளிக்கப்பட்ட 12 மீட்டர்கள் பொது சாலை; கிழக்கில்: பிள்ளையார் கோயில் தெரு மற்றும் ஜவகர்லால் நேரு தெரு; மேற்கில்: பாடி கிராமம்; **அட்டவணை B:** மேற்குறிப்பிட்ட சொத்தில் உள்ள பிரிக்கப்படாத பங்கு 564ச.அடி அதனுடன் "Metro Zone" எனும் கட்டிடத்தின் 12வது தளத்தில் அமைந்துள்ள 2062ச.அடி கொண்ட ஃபிளாட் எண்.K-1201, # 40 பொதுப் பரப்பு, #41 கார் நிறுத்தும் இடம் 1, அதனைச் சார்ந்த அனைத்தும்.
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 20.09.2021
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 1,89,91,235 + 01.07.2022 அன்று முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 25.01.2021 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.1,98,29,500/-
டேவணித் தொகை : ரூ.19,83,000/-
ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/-

வ.எண்.3: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்
திரு.V.அல்லிமுத்து, கிளை: திருவள்ளூர், கணக்கு எண்: 607900NC00000940 . **திரு.V.அல்லிமுத்து,** பழைய எண் A/2,புதிய எண் A/237, MPT குடியிருப்பு, A TYPE, இராயபுரம், சென்னை-600081 . **திரு.M.G.பிரகாஷ்,** எண்.5,முதல் தெரு, கார்ப்பரேசன் காலனி, தண்டையார்பேட்டை, சென்னை-600 081.
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்) :
காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், எண்.192/87,வேப்பம்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.101/1C இல் அடங்கிய "ஸ்ரீ இராகவேந்திரா நகர் அனெக்ஸ்", மனை எண்.15-C இல் உள்ள 1602ச.அடி (142.82ச.மீட்.) விஸ்தீரணமுள்ள காலி நிலம், விருப்பம் மற்றும் பத்திரத்தின்படி பிரிக்கப்படாத பங்கு 320ச.அடி உரிமை நிலம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, **எல்லைகள்:** வடக்கில்:பாலாஜி நகர்; தெற்கில்: 16அடி சாலை; கிழக்கில்: மனை எண்.15B மற்றும் மேற்கில்: மனை எண்.15-D.
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 22.10.2012
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 22,16,962/ அதனுடன் 01.07.2022 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 22.03.2013 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.6,03,000/-
டேவணித் தொகை : ரூ.60,300/-
ஏல உயர்வு தொகை : ரூ.10,000/-

வ.எண்.4: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்
KK நகர்- சென்னை A/c No 251000IS00000037 M/s Optical Expression மனை எண்.82 MGR சாலை, ஜகதாம்பா காம்ப்ளக்ஸ், நங்கநல்லூர், சென்னை -600061. மேலும் ஒரு முகவரி: எண்.4, அன்னை இந்திரா நகர், IT நெடுஞ்சாலை, துரைப்பாக்கம், சென்னை -600097, எண்.4, 5, குமரன் காலனி பிரதான சாலை, வடபழனி, சென்னை-600026. உரிமையாளர் முகவரி திருமதி. யாசின் பானு, எண்.2091 2வது பிளாக், அப்பாசாமி சிரஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், ஆற்காட் சாலை, விருகம்பாக்கம், சென்னை-600093. மேலும் ஒரு முகவரி: எண்.7D, 4வது பிளாக், சீப்ரோஸ் சியாமளா கார்டன், எண்.136, ஆற்காட் சாலை, சாலிகிராமம், சென்னை-600093 மற்றும் எண்.211, 11வது தெரு, S-1, 2வது தளம், ரூபா பவுண்டேசன்ஸ், சௌத்ரி நகர், வளசரவாக்கம், சென்னை-600087. **ஜாமீன்தாரர்** திரு. அன்வர் பாஷா, மனை எண்.205, முனியப்பா நகர், 4வது தெரு, நெற்குன்றம், சென்னை-600107. மேலும் ஒரு முகவரி: PC3, டபுள் டேங்க் காலனி, KK நகர், சென்னை-600078. **சொத்து ID: PUNB36120282**
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்) : திரு.S. அன்வர் பாஷா அவர்களின் பெயரில் உள்ள சொத்து, தென் சென்னை பதிவு மாவட்டம், மற்றும் விருகம்பாக்கம் சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சைதாப்பேட்டை வட்டம், எண்.83, நெற்குன்றம் கிராமம், சர்வே எண். 127/2 இல் அடங்கிய மனை எண்.205, முனியப்பன் நகர், 4வது தெரு, இல் உள்ள கட்டிடம் மற்றும் 1200 ச.அடி கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, மற்றும் அதன் **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.204, கதவு எண்.7/41 கடை மற்றும் வீடு, தெற்கில்: மனை எண்.206, காலி நிலம், கிழக்கில்: சர்வே எண்.128, மேற்கில்: 24 அடி சாலை.
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 11.01.2019
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 59,64,608.00/- அதனுடன் 01.07.2022 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 26.04.2019 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.1,09,00,000/-
டேவணித் தொகை : ரூ.10,90,000/-
ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/-

வ.எண்.5: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்
உதயகார்த்திக். K, திருவள்ளூர் கிளை (A/c: 2142300000365) உதயகார்த்திக். K, J.ஜனனி, இருவரின் முகவரி : 43, நெருப்புமேடு, ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை–600 015. **சொத்து ID : PUNB36120166.**
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்)
உதயகார்த்திக் அவர்களின் பெயரில் உள்ள சொத்து : சர்வே எண்.370/6, 371/2 இல் அடங்கிய மனை எண்.21, ஸ்ரீ வெங்கடேஷடஷ்வரா நகர் விரிவு, கல்யாணகுப்பம் சாலை, ஈக்காடு, திருவள்ளூர் இல் உள்ள 1717 ச.அடி கொண்ட முடிவுபெறாமலிருக்கும் தனி வீடு மற்றும் சொத்தின் **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.28, குடியிருப்பு கட்டிடம், தெற்கில்: 20 அடி சாலை, கிழக்கில்: மனை எண்.22, குடியிருப்பு கட்டிடம், மேற்கில்: காலி நிலம்
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 06.09.2018
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 20,92,641.00/ அதனுடன் 01.07.2022 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 05.03.2019 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள மெய்நிலை
குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.13,28,602/-
டேவணித் தொகை : ரூ.1,33,000/-
ஏல உயர்வு தொகை : ரூ.25,000/-

வ.எண்.6: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்: Ms. N.கஸ்தூரி, மின்ட் கிளை (A/c: 252400NC00166962) Ms.N.கஸ்தூரி த/பெ நாகராஜன் 19, பெரியபாளையத்தம்மன் கோயில் 1வது தெரு, மணப்பாக்கம், சென்னை - 600 116. **செல்வி N.கஸ்தூரி த/பெ நாகராஜன்** பிளாட் எண். G2, தரை தளம், பழைய எண் 5, புதிய எண் 7 மற்றும் பாரதியார் தெரு ராமகிருஷ்ணா நகர் லேஅவுட், வளசரவக்கம், சென்னை 600 125.
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்): N. கஸ்தூரி அவர்களின் உரிமைப் பெற்ற சொத்து திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், வளசரவாக்கம் கிராமத்தின் பட்டா எண்.1667 இன் படி சர்வே எண்.116/1, துணைப் பிரிவு புதிய சர்வே எண்.116/321 இல் அடங்கிய மனைப் பிரிவின் அங்கீகார எண். LPDM / DTP 1/67 படி பழைய கதவு எண்.5, புதிய கதவு எண்.7, பாரதியார் தெரு, ராமகிருஷ்ணா நகர் மனைப்பிரிவின் மனை எண். 218 இன் விஸ்தீரணம் ஒரு கிரவுண்டு மற்றும் 400 ச.அடி அதாவது 2800 ச.அடி அதில் பிரிக்கப்படாத 1/4 பங்கு மற்றும் அதில் தரை தளத்தில் அமைந்துள்ள ஃபிளாட் எண்.G2 கட்டிடப் பரப்பு 750 ச.அடி. அதனைச் சார்ந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும், மற்றும் மொத்த சொத்தின் **எல்லைகள்:** வடக்கில் : மனை எண். 217; தெற்கில் : மனை எண். 219; கிழக்கில் : 30 அடி அகல சாலை; மேற்கில்: மனை எண்.205
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 04.07.2019
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 31,87,445.00/- அதனுடன் 01.07.2022 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 12.01.2021 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.74,25,000/-
டேவணித் தொகை : ரூ.7,43,000/-
ஏல உயர்வு தொகை : ரூ.50,000/-

வ.எண்.7: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்
மகாவீர்.D, மின்ட் கிளை (A/c: 252400NC00166944) மகாவீர்.D, 54, குப்புமுத்து தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. வனிதா.M, 54, குப்புமுத்து தெரு, திருவட்டீஸ்வரன்பேட்டை, சென்னை – 600 005. **சொத்து ID: PUNB36120164**
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்)
திரு. மகாவீர்.D, அவர்களின் உரிமைப் பெற்ற சொத்து. காஞ்சிபுரம், செங்கல்பட்டு வட்டத்தின் சர்வே எண்.44/2B1B பட்டாவின் படி சர்வே எண்.249/8 இல் அடங்கிய எண்.33, சன்பாலால் சாலை, நாவலூர் கிராமத்தில் உள்ள 2974ச.அடி நிலத்தில் 525ச.அடி பிரிக்கப்படாத பங்கு, அதனுடன் (தென் கிழக்கு பகுதி), கிழக்குபுறம் பிளாக், முதல் தளம், குடியிருப்பு ஃபிளாட் எண்.F-3, மற்றும் மொத்த சொத்தின் **எல்லைகள்:** வடக்கில்: சம்பாலால் சாலை, தெற்கில்: நாராயணன் அவர்களின் உரிமைப் பெற்ற சர்வே எண்.45 இல் உள்ள நிலம், கிழக்கில்: Ms. வேதவள்ளி அவர்களின் நிலம், மேற்கில் : திரு. R. இராமதாஸ் அவர்களின் உரிமைப் பெற்ற நிலம்.
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 04.07.2019
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 75,92,937.60/- அதனுடன் 01.07.2022 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 12.01.2021 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.35,64,000/-
டேவணித் தொகை : ரூ.3,56,400/-
ஏல உயர்வு தொகை : ரூ.25,000/-

வ.எண்.8 : கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்
திரு.D. பச்சையப்பன், கோடம்பாக்கம் கிளை (A/c: 10856015002618), திரு.D. பச்சையப்பன், 24/59, சரவணபெருமாள் தெரு, புரசைவாக்கம், சென்னை 600084, **திரு.D. பச்சையப்பன்** மனை எண்.13 நர்மதா என்க்ளேவ், ஃப்ளாட் G-1, தரை தளம், வாசுகி அப்பார்ட்மெண்ட், நர்மதா நகர் 3வது தெரு, அய்யஞ்சேரி கிராமம், ஊரப்பாக்கம், சென்னை 603210. **சொத்து ID : PUNB36120018**
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்)
திரு. D. பச்சையப்பன் அவர்களின் பெயரில் உள்ள, ஃப்ளாட் எண்.G-1 தரை தளம், மனை எண்.13, "வாசுகி அப்பார்ட்மெண்ட்", பழைய சர்வே எண்.57/4, பட்டாவின் படி எண்.3958, புதிய சர்வே எண். 57/4A5, நர்மதா என்க்ளேவ், நர்மதா நகர், 3வது தெரு, அய்யஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 1826 ச.அடி நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 354 ச.அடி மற்றும் அதில் அமைந்துள்ள 820 ச.அடி கொண்ட ஈடுபெற்ற குடியிருப்பு ஃப்ளாட், அதன் எல்லைகள் : வடக்கில் : 23அடி சாலை, தெற்கில் : காலி நிலம், கிழக்கில் : மனை எண்.14, மேற்கில் : மனை எண்.12-A.
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 05.07.2018
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. 36,72,730.00/ மற்றும் 01.07.2022 அன்று முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 17.09.2018 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.23,33,000/-
டேவணித் தொகை : ரூ.2,33,300/-
ஏல உயர்வு தொகை : ரூ.25,000/-

வ.எண்.9 : கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்
திரு.K.பழனி, கிளை: ஆவடி கணக்கு எண்: 298000NC00034502 திரு.K.பழனி, த/பெ.P.குமாரசாமி, 87,வேப்பம்பட்டு சத்திரம், திருவள்ளூர் - 602 024 திருமதி.P.இராஜேஸ்வரி, க/பெ.K.பழனி, 87,வேப்பம்பட்டு சத்திரம், திருவள்ளூர் -602 024
அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்து(க்களின்) அடமானதாரர்)
வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் ஆவடி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், ஆவடி மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, எண்.4,பலேரிப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.11நகர சர்வே விஸ்தீரண நிலப் பதிவேட்டின் படி T.சர்வே எண்.143,22,23,பிளாக் எண்.17,வார்டு-H, புதிய சர்வே எண்.11பகுதி மற்றும் 16.04.2013 தேதியிட்ட PP எண்கள்.304/13/F1, 19.04.2013 தேதியிட்ட 315/132/F1 மற்றும் 04.08.2011 தேதியிட்ட B.A எண்கள்.617/11/F1 ஆவடி நகராட்சியினால் வழங்கப்பட்ட CMDA அங்கீகாரத்தின் படி "பாரதி தெரு" இல் உள்ள வகை எண்.1, மனை எண்.14 இன் விஸ்தீரணம் 2562 ச.அடி மற்றும் வகை எண்.II, மனை எண்.15 இன் விஸ்தீரணம் 2795ச.அடி ஆக மொத்தம் 5357ச.அடி விஸ்தீரணமுள்ள நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 400ச.அடி, அதில் அமைந்துள்ள இரண்டாம் தளத்தில் உள்ள 1180ச.அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட குடியிருப்பு ஃப்ளாட் எண்.S1, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, **மனை எண்.14 இன் எல்லைகள்:** வடக்கில்: 20அடி சாலை; தெற்கில்: சர்வே எண்.2; கிழக்கில்: மனை எண்.15; மேற்கில்: மனை எண்.13; **மனை எண்.15 இன் எல்லைகள்:** வடக்கில்: 20அடி சாலை; தெற்கில்: சர்வே எண்.12A; கிழக்கில்: சாலை; மேற்கில்: மனை எண்.14.
A) 13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி 04.06.2018
B) நிலுவைத் தொகை 30.06.2022 அன்றுள்ளபடி ரூ. . 60,17,861.00 மற்றும் 01.07.2022 அன்று முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
C) 13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி 29.12.2018 D) சுவாதீன நிலை : மெய்/ ஆக்கப்பூர்வ / அடையாள அடையாள
குறைந்தபட்சகேட்பு விலை: ரூ.33,94,160/-
டேவணித் தொகை : ரூ.3,39,500/-
ஏல உயர்வு தொகை : ரூ.25,000/-

மின்ஏலத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்
மின் ஏல விற்பனை மற்றும் நிபந்தனைகளை எங்களது இணையதளமான (1) https://www.ibapi.in (2) https://eprocure.gov.in/epublish/app (3) https://www.mstcecommerce.com (4) www.tenders.gov.in-ல் பார்க்கவும். இங்கே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஈடு பெற்ற சொத்துகளின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவல்களுக்கு கூறப்பட்டுள்ளன, ஆனால் இந்த பிரகடனத்தில் எந்தவொரு பிழை, தவறான விளக்கம் அல்லது விடுபடுதலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்க மாட்டார்.
SARFAESI சட்டம் 2002 விதி 8(6)ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.
தேதி : 16.08.2022
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

ஒரே பொது நுழைவுத் தேர்வு திட்டத்துக்கு அவசரம் காட்ட விரும்பவில்லை: யுஜிசி தலைவர்

புது தில்லி, ஆக.16: அனைத்து படிப்புகளுக்கும் ஒரே பொது நுழைவுத் தேர்வை அறிமுகம் செய்யும் திட்டத்தில் அவசரம் காட்ட விரும்பவில்லை என்று பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) தலைவர் ஜகதீஷ் குமார் கூறினார்.

மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை-அறிவியல் பட்டப் படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கு புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு (க்யூட்) நிகழாண்டில் முதல் முறையாக கடந்த ஜூலை 15-ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 20-ஆம் தேதி வரை பல கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே, தொழில்நுட்ப கோளாறுகள், கேள்வித்தாளை பதிவிறக்கம் செய்ய முடியாத நிலை போன்ற பல்வேறு காரணங்களால் க்யூட் தேர்வு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மட்டும் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகிறது.

கடைசியாக, ஆகஸ்ட் 17 முதல் 20-ஆம் தேதி வரை நடைபெறும் நான்காம் கட்ட க்யூட் தேர்வில் 3.72 லட்சம் பேர் பங்கேற்க இருந்த நிலையில், அவர்களில் 11,000 மாணவர்களுக்கு மட்டும் பல்வேறு காரணங்களால் தேர்வு ஆக.30-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், தில்லியில் செய்தியாளர்களை செவ்வாய்க்கிழமை சந்தித்த ஜகதீஷ் குமாரிடம், தொடர் தொழில்நுட்ப கோளாறுகளை க்யூட் தேர்வு சந்தித்து வரும் சூழலில், யுஜிசி தரப்பில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டதுபோல பொறியியல் நுழைவுத் தேர்வான 'ஜேஇஇ' மற்றும் மருத்துவப் படிப்புக்கான 'நீட்' நுழைவுத் தேர்வுகளுடன் 'க்யூட்' தேர்வு இணைக்கப்பட்டு அனைத்துப் படிப்புகளுக்கும் ஒரே நுழைவுத் தேர்வு அறிமுகம் செய்யப்படுமா?' என்ற கேள்வியை எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜகதீஷ் குமார் கூறியதாவது: க்யூட் முதல் கட்டத் தேர்வுகளில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது என்பது பின்னடைவு அல்ல. அதிலிருந்த பாடம் கற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த கோளாறுகள் விரைவில் சரி செய்யப்பட்டுவிடும் என்பதோடு, க்யூட் தேர்வு வரும் காலங்களில் விரிவுபடுத்தப்படுவதிலும் எந்தத் தடையும் இருக்காது.

புதிய தேசிய கல்விக் கொள்கையின்படி, மாணவர்கள் பல்வேறு நுழைவுத் தேர்வுகளில் பங்கேற்கும் நிலையை மாற்றி ஒரே பொது நுழைவுத் தேர்வை அறிமுகம் செய்யும் திட்டம் உள்ளது. இருந்தபோதிலும், ஒரே பொது நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்துவதில் அவசரம் காட்ட விரும்பவில்லை. அது மிகப் பெரிய பணி என்பதால், நன்கு திட்டமிட வேண்டிய அவசியம் உள்ளது.

இம்மாத இறுதியில் நிபுணர் குழு: ஒரே பொது நுழைவுத் தேர்வை அறிமுகம் செய்வதில் உள்ள இடர்பாடுகள் குறித்து நன்கு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதற்கென இந்த மாத இறுதியில் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது. அந்தக் குழு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடத்தப்படும் அனைத்து முக்கியத்துவம் வாய்ந்த நுழைவுத் தேர்வுகளையும் ஆய்வு செய்யும்.

மேலும், பொது நுழைவுத் தேர்வை அறிமுகம் செய்வதில் அனைத்து தரப்பினரின் ஒருமித்த கருத்து எட்டப்பட வேண்டும். குறிப்பாக, பாடத் திட்ட விவகாரத்துக்கு உரிய தீர்வு எட்டப்பட வேண்டும். ஒவ்வொரு படிப்புக்கும் தனித்துவமான பாடத் திட்டம் இருக்கும் என்பதோடு, பல்வேறு நிலைகளுக்கும் அது மாறுபடும். இவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்பட வேண்டும்.

க்யூட் தேர்வுடன் ஒப்பிடும்போது ஜேஇஇ மற்றும் நீட் நுழைவுத் தேர்வுகளில் வேறுபட்ட பாடங்களின் எண்ணிக்கை குறைவே. எனவே, இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களுக்கு குறிப்பிட்ட நாள்களிலும், வரலாறு, அரசியல் அறிவியல் போன்ற பிற பாடங்களுக்கு மற்ற நாள்கள் என அடுத்தடுத்த கட்டங்களில் நுழைவுத் தேர்வு நடத்திவிட முடியும்.

மேலும், எதிர்காலத்தில் கணினி அடிப்படையிலான (சிபிடி) நுழைவுத் தேர்வு மட்டுமே நடைபெறும். அந்த வகையில் அனைத்துப் படிப்புகளுக்குமான ஒரே பொது நுழைவுத் தேர்வை ஆண்டுக்கு இரண்டு முறை கணினி வழி தேர்வாக நடத்துவதே மத்திய அரசின் திட்டம் என்று அவர் கூறினார்.

நான்காம் கட்ட 'க்யூட்' தேர்வு இன்று தொடக்கம்

புது தில்லி, ஆக.16: நான்காம் கட்ட க்யூட் (மத்திய பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு) புதன்கிழமை (ஆக.17) தொடங்க உள்ளது. இந்த தேர்வில் 3.6 லட்சம் பேர் பங்கேற்க உள்ளனர்.

இந்த நான்காம் கட்ட தேர்வில் 3.72 லட்சம் பேர் பங்கேற்க இருந்த நிலையில், தேர்வறை மாற்றம் காரணமாக 11,000-க்கும் அதிகமான மாணவர்களுக்கு மட்டும் ஆகஸ்ட் 30-ஆம் தேதிக்கு தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அனைத்து கட்ட க்யூட் தேர்வுகளையும் ஆகஸ்ட் 20-ஆம் தேதிக்குள் முடிக்க என்டிஏ (தேசிய தேர்வுகள் முகமை) திட்டமிட்டிருந்தது. பின்னர் தேர்வுகள் அனைத்தும் ஆகஸ்ட் 28-ஆம் தேதி நிறைவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், பல தேர்வு மையங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக க்யூட் தேர்வானது 6 கட்டங்களாக மாற்றப்பட்டது.

இதுகுறித்து யுஜிசி (பல்கலைக்கழக மானியக் குழு) தலைவர் ஜகதீஷ் குமார் கூறுகையில், 'தேர்வு மையங்களுக்கான நகரங்களை மாற்றி தேர்வு செய்துள்ளதன் காரணமாக க்யூட் தேர்வு எழுதவிருக்கும் 3.72 லட்சம் மாணவர்களில் 11,000-க்கும் அதிகமான மாணவர்களுக்கு மட்டும் தேர்வானது ஆகஸ்ட் 30-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. தேர்வை நடத்துவதில் தரத்தை உறுதிப்படுத்தும் விதமாக தேர்வு மையங்களின் எண்ணிக்கையையும், தேர்வறையில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையையும் தேர்வை நடத்தும் என்டிஏ அதிகரித்துள்ளது' என்றார்.

முன்னதாக, இரண்டாம் கட்ட க்யூட் தேர்வு தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக சில மையங்களில் ரத்து செய்யப்பட்டது. அதுபோல, மழை, நிலச்சரிவு பாதிப்புகள் காரணமாக கேரளம், இடாநகர் பகுதிகளில் இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட க்யூட் தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன.

இந்தச் சூழலில், நான்காம் கட்ட க்யூட் தேர்வு புதன்கிழமை (ஆகஸ்ட் 17) தொடங்கி ஆகஸ்ட் 20-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் 3.6 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றரை கி.மீ. நீள 'வாசுகி' சரக்கு ரயில் வெள்ளோட்டம்

புதுதில்லி, ஆக.16: நாட்டிலேயே நீளமான மற்றும் அதிக சரக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லக் கூடிய 'சூப்பர் வாசுகி' சரக்கு ரயில் (3.5 கி.மீ. நீளம்) திங்கள்கிழமை வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

சத்தீஸ்கர் மாநிலம், கோர்பாவில் இருந்து மகாராஷ்டிரத்தின் நாகபுரிக்கு 295 சரக்கு பெட்டிகளில் 27 ஆயிரம் டன் நிலக்கரியை ஏற்றிக் கொண்டு, இந்த ரயில் சாதனைப் பயணத்தை மேற்கொண்டது. இந்த ரயிலில் 6 என்ஜின்கள் பொருத்தப்பட்டிருந்தன. முதலிலும் இறுதியிலும் இரு என்ஜின்களும் குறிப்பிட்ட இடைவெளிகளில் இடையிடையே மேலும் 4 என்ஜின்களும் பொருத்தப்பட்டிருந்தன.

இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 'சூப்பர் வாசுகி' ரயிலின் சோதனை இயக்கம் மேற்கொள்ளப்பட்டதென தென்கிழக்கு மத்திய ரயில்வே தெரிவித்தது.

'கோர்பா, நாகபுரி இடையிலான 267 கி.மீ. தொலைவை 11.20 மணி நேரத்தில் இந்த ரயில் கடந்தது; ஒரே பயணத்தில் சுமார் 9,000 டன் நிலக்கரியை (90 பெட்டிகளில் தலா 100 டன்கள்) எடுத்துச் செல்லும் சரக்குரயில்கள்தான் தற்போது உள்ளன. சூப்பர் வாசுகி ரயிலின் மூலம் மூன்று மடங்கு அதிக நிலக்கரியை எடுத்துச்செல்ல முடியும்.

3,000 மெகாவாட் திறன்கொண்ட மின் உற்பத்தி நிலையத்துக்கு ஒரு நாள் முழுக்கத் தேவையான நிலக்கரியை இந்த ரயிலின் ஒரே பயணத்தின் மூலம் பூர்த்தி செய்துவிடலாம்' என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயங்கரவாதிகள் தாக்குதலில் காஷ்மீர் பண்டிட் பலி

ஸ்ரீநகர், ஆக. 16: ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் காஷ்மீர் பண்டிட் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பலியானார். தாக்குதலில் காயமடைந்த அவரின் சகோதரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஜம்மு-காஷ்மீரில் உள்ள சிறுபான்மையின பண்டிட் சமூகத்தினர், வெளிமாநிலத் தொழிலாளர்கள் ஆகியோரைக் குறிவைத்து தாக்கும் சம்பவங்களை பயங்கரவாதிகள் சில மாதங்களுக்கு முன் நிகழ்த்திவந்தனர். அதையடுத்து, ஜம்மு-காஷ்மீர் முழுவதும் காவல் துறையினரும் பாதுகாப்புப் படையினரும் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தினர். அதனால் பயங்கரவாதிகளின் தாக்குதல் சம்பவங்கள் சற்று குறைந்திருந்தன.

இந்தியாவின் 76-ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட நிலையிலும், ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் பொதுமக்கள் மீதான தாக்குதலை பயங்கரவாதிகள் மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காவலர் ஒருவர் பயங்கரவாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார். பந்திபோராவில் கடந்த வாரம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பிகாரைச் சேர்ந்த தொழிலாளர் பலியானார். சுதந்திர தினத்தின்போது பட்காம், ஸ்ரீநகர் மாவட்டங்களில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்நிலையில், சோபியான் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் செவ்வாய்க்கிழமை நிகழ்த்திய தாக்குதலில் பண்டிட் சமூகத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டார். காயமடைந்த அவரின் சகோதரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகக் காவல் துறையினர் தெரிவித்தனர். அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு ஜம்மு-காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஒமர் அப்துல்லா, பாஜக செய்தித் தொடர்பாளர் அல்தாஃப் தாக்குர் உள்ளிட்ட பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பயங்கரவாதிகளின் தாக்குதலில் நடப்பாண்டில் மட்டும் 15 பொதுமக்களும் 6 பாதுகாப்புப் படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

'காஷ்மீரில் இருந்து வெளியேறுங்கள்': பண்டிட் சமூகத்தினர் மீதான தாக்குதல் அதிகரித்துள்ள நிலையில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் இருந்து வெளியேறுமாறு அச்சமூகத்தினரை காஷ்மீர் பண்டிட் கூட்டமைப்பு (கேபிஎஸ்எஸ்) கோரியுள்ளது. இது தொடர்பாக அக்கூட்டமைப்பின் தலைவர் சஞ்சய் டிக்கூ கூறுகையில், "கடந்த 32 ஆண்டுகளாகவே இது நடைபெற்று வருகிறது. சிறுபான்மையினருக்கு முக்கியமாக காஷ்மீர் பண்டிட் சமூகத்தினருக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதில் அரசு தோல்வியடைந்துவிட்டது.

சுதந்திர தினப் பேரணியின்போதும் அமர்நாத் யாத்திரையின்போதும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தவில்லை. காஷ்மீருக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கூட பாதுகாப்பாக இருக்கிறார்கள். ஆனால், பண்டிட் சமூகத்தினருக்குப் பாதுகாப்பில்லை. பண்டிட் சமூகத்தினரை வெளியேறுமாறு கூறுவதற்காக அரசு சிறையில் அடைத்தாலும் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன்" என்றார்.

ICICI Home Finance
பெருநிறுவன அலுவலகம் - ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., ICICI HFC டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை-400 059, இந்தியா
கிளை அலுவலகம் : ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., 2 வத தளம், AB-106, பழைய எண். 134, 4 வது அவென்யூ, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை-600040
(பார்க்க - விதி 8 (6) க்கான விதி விலக்கு)
அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட். -ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள் 'இருக்கின்ற இடத்தில்' 'இருக்கின்ற நிலையில்' மற்றும் 'இருக்கின்றவற்றுடன்' என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிட்ட சுருக்கமான விபரங்களின் படி விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன்தாரர்(கள்) / கூட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / சட்ட வாரிசுகளின் பெயர் / கடன் கணக்கின் எண்.	அடமானச்சொத்து விபரங்கள் (தெரிந்த வில்லங்கங்களுடன்) (ஏதேனும் இருப்பின்)	நிலுவை தொகை (ரூபாயில்)	அடிப்படை விலை / டேவணித் தொகை	சொத்து ஆய்வு தேதி & நேரம்	ஏல தேதி & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	A சௌந்தரராஜன் (கடன்தாரர்) பச்சையம்மாள் (கூட்டு கடன்தாரர்) / கடன் கணக்கு எண். LHANC00001315583	ப்ளாட் எண். 6, 7 மற்றும் 8, ஈஸ்வரி நகர், பொலிவாக்கம், திருவள்ளூர்-602101	05.08.2022 ம் தேதியின் படி ரூ. 39,30,825/-	ரூ. 23,02,575/- ரூ. 2,30,258/-	14.09.2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	20.09.2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

ஆன்லைன் ஏலமானது, ஏல முகமை க்ளோபல் டெக் - ன் வலைதளம் (URL Link https://BestAuctionDeal.com) ல் நடைபெறும். மொத்த நிலுவைத்தொகைகளை மேற்கொண்டு வரும் வட்டியுடன் சேர்த்து 19.09.2022-ம் தேதி மாலை 05.00 மணிக்கு முன்பு வரை செலுத்த அடமானதாரர் / இவ்வறிவிப்பு வழங்கப்பெற்றவர் ஆகியோருக்கு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது., தவறும் பட்சத்தில் இந்த ஜாமீன் சொத்து/க்கள் பட்டியலிட்டவாறு விற்பனை செய்யப்படும்.
விலைகோர உத்தேசித்துள்ளோர் / வாங்குவோர், RTGS / கேட்பு வரைவோலையாக (DD) எடுக்கப்பட்ட மேற்சொன்ன டேவணித்தொகையுடன் (EMD) (களம் "E" ல் குறிப்பிட்டவாறு) கூடிய விலைப்புள்ளிகளை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., 2 வத தளம், AB-106, பழைய எண். 134, 4 வது அவென்யூ, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை-600040ல் 19.09.2022-ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு முன்பே, சமர்ப்பிக்க வேண்டும். விருப்பமுள்ள ஏலதாரர்(கள்) தங்களது விலைப்புள்ளிகளை வலைதளம் மூலம் சமர்ப்பிக்க இயல வில்லையெனில், தமது கையொப்பமிட்ட விலைப்புள்ளி ஆவணங்களை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., 2 வத தளம், AB-106, பழைய எண். 134, 4 வது அவென்யூ, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை – 600 040 என்ற முகவரிக்கு 19.09.2022-ம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு முன்பே கிடைக்குமாறு அனுப்பலாம் என்பதை தயவு கூர்ந்து அறியவும். டேவணித்தொகையானது, கேட்பு வரைவோலையாக (DD) ஏதேனும் தேசியமயமாக்கப்பட்ட / பட்டியலிடப்பட்ட வங்கியில் "ICICI HOME FINANCE COMPANY LIMITED" என்ற பெயரில் சென்னையில் செலுத்தக்கவாறு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
மேலும், சொத்து ஆய்வு, ஏலம் அல்லது விலைப்புள்ளி சமர்ப்பிப்பு தொடர்பாக ஏதேனும் விபரங்கள் தேவைப்படுமாயின், ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ன் அலைபேசி எண்கள் - 70210 72869 அல்லது NexXen Solutions Private Limited - யை தொடர்பு கொள்ளலாம்.
அதிகாரப்பூர்வ அலுவலர், எந்த காரணமும் குறிப்பிடாமல் எந்த ஒரு அல்லது அனைத்து ஏலம் / விலைப்புள்ளியை தள்ளுபடி செய்யவோ, ஏற்றுக்கொள்ளவோ உண்டான உரிமையை தன்னகத்தே வைத்துள்ளார்.
விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் https://www.icicihfc.com/ யை தயவு கூர்ந்து பார்வையிடவும்.
தேதி : 17.08.2022
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

சூரியசக்தி மின்தகடு ஊழல்: காங். எம்.பி.யிடம் சிபிஐ விசாரணை

புது தில்லி, ஆக. 16: கேரளத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய சூரியசக்தி மின்தகடு ஊழல் வழக்கில், காங்கிரஸ் எம்.பி. வேணுகோபாலிடம் கடந்த வாரம் விசாரணை நடத்தியதாக மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ) அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

சூரியசக்தி மின்தகடு ஊழல் தொடர்பாக வேணுகோபால், முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டி உள்ளிட்ட 6 பேர் மீது கேரள காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு இந்த வழக்கு சிபிஐ-க்கு மாற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து, காங்கிரஸ் எம்.பி. வேணுகோபாலிடம் சிபிஐ அதிகாரிகள் கடந்த வாரம் விசாரணை மேற்கொண்டனர்.